# J/MANIPAY HINDU COLLEGE
## (NATIONAL SCHOOL)

# FOUNDERS DAY & PRIZE DAY

**04th July 2012 Wednesday at 6.00 P.M**

**President**
*Mr. S. Sivaneswaran*
(Principal)

**Chief Guest**
*Mr. S. Muralitharan*
(Divisional Secretary, Sandilipay)

**Special guest**
*Dr. A. Ramanathan*
(President, O.S.A., Colombo)

**Guest of Honour**
*Mr. S. Sivanantharajah*
(D.E.O, Sandilipay)

**Vote of Thanks**
*Mr. N. Vivekanantharaja*
(President, O.B.A)

# Agenda

- ★ Receiving the Guests
- ★ Lighting oil lamp
- ★ Prayer
- ★ Welcome Speech
- ★ Memorial Speech
  Mr. R. Vasanthasenan, Rtd. Judge
- ★ Principal Report
- ★ Address by the Guest of Honour
- ★ Honoring the Staff
- ★ Address by the Special Guest
- ★ Prize Distribution
- ★ Address by the Chief Guest
- ★ Cultural Programme
- ★ Vote of Thanks
- ★ College Song

# அதிபர் அறிக்கை

**மதிப்புக்குரிய பிரதம அதிதி**
**திரு. எஸ். முரளிதரன் அவர்களே!**

**சிறப்பு அதிதியாக கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும்**
**டாக்டர் ஆ. இராமநாதன் அவர்களே!**

**கௌரவ அதிதியாகக் கலந்து கொண்டிருக்கும்**
**திரு. S. சிவானந்தராஜா அவர்களே!**

**நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்திருக்கும்**
**திரு. R. வசந்தசேனன் அவர்களே!**

**நன்றியுரை கூற உவகையோடு வந்திருக்கும்**
**திரு. N. விவேகானந்தராஜா அவர்களே!**

**சகோதர பாடசாலை அதிபர்களே!**
**ஆசிரியர்களே! பழைய மாணவர்களே! பெற்றோர்களே!**
**மாணவச் செல்வங்களே!**

விழாவிற்கு வருகை தந்துள்ள அனைவரையும் வரவேற்று எல்லோரும் இன்புற்று வாழ எல்லாம்வல்ல மருதடி விநாயகனை வேண்டி 2011ம் ஆண்டுக்குரிய அதிபர் அறிக்கையை சமர்ப்பிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்நன்நாளில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திரு.எஸ். முரளிதரன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையில் கடமையாற்றும் ஒரு அர்ப்பணிப்பான அதிகாரி என்பதை நாம் அறிவோம். அவர் தெல்லிப்பழை பிரதேச செயலராகப் பணியாற்றிய வேளையில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கும் உதவி தேவைப்படும் மக்களுக்கும் தன்னாலான பணியாற்றிவர் என்பதை நாம் அறிவோம். தங்கள் பணி இன்று எமது பிரதேசத்திற்கு கிடைத்தமையையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தங்கள் பணிக்காலத்தில் எமது பிரதேசம் கல்வியிலும் சமூக முன்னேற்றத்திலும் மேன்மையடைய தங்களால் இயன்ற பணிகளை ஆற்றுவீர்கள் என்ற பெரு நம்பிக்கை எமக்குண்டு. தங்களை இன்றைய விழாவில் வரவேற்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் Dr. ஆ.இராமநாதன் அவர்களே தங்களது வரவு எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவதாகும். பாடசாலையையும் சமூகத்தையும் நேசிக்கும் தாங்கள் இப்பாடசாலையில் காட்டும் அக்கறையையும்

ஆர்வத்தையும் பார்த்து நாம் மிக்க மகிழ்வடைகின்றோம். தங்களை உருவாக்கிய கல்லூரி அன்னைக்கு தங்களை உலகிற்கு அளித்த தங்கள் தந்தையின் பெயரால் உருவாக்கித் தந்த R.V. ஆறுமுகம் விளையாட்டரங்கு இக் கல்லூரிக்கு மகுடம் வைத்த வரலாறாகும். தாங்கள் உருவாக்கிய விளையாட்டரங்கு யாழ் மாவட்டத்தில் அரச பாடசாலைகளில் உருவாகிய முதலாவது Pavillion என்ற பெருமைக்குரியது. இன்று தாங்கள் தொடக்கி வைத்த இப்பணியை ஏனைய பாடசாலைகளும் முன்னுதாரணமாக்கி அப்பாடசாலைகளிலும் Pavillion அமைக்கின்ற செயற்பாடுகள் நடைபெறும் சிந்தனைக்கு தங்கள் பணியே முன்னோடியானது. இன்றைய தினம் நூற்றாண்டு நினைவாக எமது ஆசிரியர்களுக்கு தாங்கள் அளிக்கும் நினைவுக் கேடயமும், அத்தனை ஆசிரியர்களும் தங்கள் வாழ்நாளில் மறக்காமல் நினைவுபடுத்தும் அற்புத நிகழ்வாகும். இன்றைய நன்னாளில் தங்கள் பாரியார் சகிதம் கலந்து சிறப்பிப்பதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

கௌரவ விருந்தினராக வருகை தந்துள்ள கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். சிவானந்தராஜா அவர்கள் எமது பாடசாலையில் கலந்துகொள்ளும் முதல் நிகழ்வென்பதும் தங்கள் வருகையும் மிக மகிழ்வூட்டுகின்றது. பாடசாலையின் உயர்வுக்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும் தாங்கள் காட்டும் அக்கறை பாராட்டுக்குரியது. தங்களை வரவேற்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

நினைவுப் பேருரையாற்ற வருகை தந்திருக்கும் ஓய்வுநிலை நீதிபதி திரு.R. வசந்தசேனன் அவர்கள் எமது பாடசாலையுடன் நெருக்கமான தொடர்புடையவர். நிறுவுநரின் இரத்த உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவர்கள் நினைவுப் பேருரையாற்றுவதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

நன்றியுரை கூற வருகை வந்திருக்கும் பழைய மாணவர் சங்கத் தலைவரும், எமது பாடசாலையின் மூத்த பழைய மாணவருமாகிய திரு.என். விவேகானந்தராஜா அவர்களே, கல்லூரியின் உயர்வில் தங்கள் பணி மகத்தானது. கல்லூரியின் மிக மூத்த பழைய மாணவனாகிய தங்கள் காலத்திலேயே மீண்டும் கல்லூரி எழுச்சி பெற்றிருப்பதையிட்டு நீங்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டிருப்பீர்கள் என்பதில் ஐயமில்லை. கல்லூரியின் செயற்பாடுகளில் தங்கள் பணி மிகச் சிறப்பானது. மதிப்பிற்குரிய தங்களை வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றோம்.

2010இல் நூற்றாண்டு விழாவைவினைக் கொண்டாடிய வேளையில் தேசிய பாடசாலை என்ற பெருமையையும் பெற்ற எங்கள் கல்லூரி வலிகாம வலயத்தில்உ உள்ள ஒரேயொரு தேசிய பாடசாலை என்ற பெருமையுடன் இன்று கல்வி, விளையாட்டு துறைகளில் பெரு வெற்றிபெற்று வருவது எனக்கும் ஆசிரியர்களுக்கும் மன நிறைவைத் தருகின்றது.

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சண்டிலிப்பாய் கோட்டத்தில் 2010, 2011ஆம் ஆண்டுகளில் 80 வீதத்திற்கும் மேற்பட்ட சித்திகளைப் பெற்று முதலிடத்தில் இருப்பதும், உதைபந்தாட்டம், பூப்பந்தாட்டம் ஆகிய துறைகளில் மாகாண வெற்றியினையும், தேசிய நிலை வெற்றிகளைப் பெறுவதும், எமது பாடசாலை கல்வியிலும் விளையாட்டுத் துறையிலும் கடந்த ஆறு ஆண்டுகளாக எமது மாணவர்களின் வெற்றிகளை பறைவாற்றி நிற்கின்றது. இன்று கல்வியிலும் இணைபாட விதானத்திலும் சுற்றுச்சூழல் அமைப்பிலும் ஒரு பாடசாலை பெறவேண்டிய உயர்நிலையை நாம் அடைந்துள்ளோம்.

எம் கல்வி இலக்கில் நாம் பெரும் வெற்றி பெற்றுள்ளோம் என்ற மன நிறைவைத் தருகின்றது. கல்லூரி இன்று மீண்டும் எழுச்சி பெற்று நிற்பது நம் அனைவருக்கும் நிறைவையும் பெரு மகிழ்ச்சியையும் தருகின்றது. யாழ்ப்பாணக் கல்விப் புலத்தில் மானி இந்து மீண்டும் தன் தடத்தைப் பதித்திருப்பது சமூகத்திற்குக் கிடைத்த வெற்றியாகும் என்ற மகிழ்வுடனும் பெருமையுடனும் இன்றைய பரிசளிப்பு விழாவைக் கொண்டாடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

## ஆசிரியர் விபரம்

| | | |
|---|---|---|
| ஆசிரியர்களின் எண்ணிக்கை | - | 74 |
| பட்டதாரி ஆசிரியர் | - | 45 |
| விசேட பயிற்சி பெற்றோர் | - | 04 |
| கல்வியியற் கல்லூரி | - | 24 |
| பயிற்றப்படாதோர் | - | 01 |
| கல்வியியற் கல்லூரி பயிலுநர் | - | 02 |

## மாணவர் விபரம்

| | | |
|---|---|---|
| கனிஷ்ட இடைநிலை 6-8 | - | 369 |
| சிரேஷ்ட இடைநிலை 9-11 | - | 464 |
| உயர்தரம் | | 302 |
| மொத்தம் | - | 1135 |

## கல்விப் பெறுபேறுகள்
### க.பொ.த(சா/த) பரீட்சை

| | |
|---|---|
| E. துவாரகன் | 8A B |
| A. நிசாந்தன் | 7A B C |
| T. துவாரகன் | 7A B S |
| A. நிதுர்ஷன் | 7A 2C |

ஆகியோர் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளதுடன் 81 வீதமான மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. கடந்த இரு வருடங்களாக சண்டிலிப்பாய் கோட்டத்தில் சித்தி வீத்தில் முதலிடத்தில் இருப்பது கல்வித் துறையில் மானி இந்து மீண்டும் உயர் நிலையை அடைந்து வருவதற்குச் சான்றாகும். இவ் வெற்றிக்கு உழைத்த ஆசிரியர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

## க.பொ.த (உ/த)ப் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றவர்கள்

கணித, விஞ்ஞானப்பிரிவு

| | |
|---|---|
| P. கீர்த்தனன் | 2AC |
| S. உதயராஜ் | B2C |
| S. பிரபாகர் | 3C |
| R. உமாசங்கர் | 3C |
| K. சிவதீபன் | 3C |

கலைப்பிரிவு

| | |
|---|---|
| B. மோகன்ராஜ் | 3A |
| K. வசீகரன் | 2AB |

வர்த்தகப்பிரிவு

| | |
|---|---|
| E. தனேஸ் | A2B |

உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பாடசாலைக்குப் புகழைத் தேடித் தந்த இம் மாணவர்களைப் பாராட்டுவதில் மட்டற்ற மகிழ்ச்சி யடைகின்றேன். கடந்த சில ஆண்டுகளாக மீண்டும் பொறியியல், மருத்துவத் துறைக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்ற அளவில் க.பொ.த. உயர்தரப் பெறுபேறுகள் வளர்ச்சியடைந்து வருவதையிட்டு பெருமை கொள்கின்றோம். மீண்டும் எமது கல்லூரி முன்னைய சிறப்பை இன்னும் சில வருடங்களில் பெற்றுவிடும் என்ற அசையாத நம்பிக்கை எனக்கும் ஆசிரியர்களுக்கும் உண்டு.

## பல்கலைக்கழக அனுமதி

இவ்வாண்டு பல்கலைக்கழகத்திற்கான அனுமதி தாமதமடைவதால் அவர்களது விபரம் இங்கு குறிப்பிடப்படவில்லை. எனினும் இருபதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் பொறியியல் பீடம் உட்பட பல்வேறு பீடங்களுக்குத் தெரிவு செய்யப்படும் வாய்ப்பு உள்ளது என்பதை இங்கு அறியத்தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

## எமது அஞ்சலிகள்

### திரு.நா.பத்மநாதன்

எமது கல்லூரியின் பௌதிகவியல் ஆசிரியராகவும், பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும் கடமையாற்றிய இவர், க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு பௌதிகவியல் பாடத்தினை செய்முறையுடன் மகிழ்ச்சியாகக் கற்பிப்பதில் வல்லவர். இவரது இழப்பு கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

## விளையாட்டுத்துறை

மானி இந்துக் கல்லூரி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் முன்னணியில் திகழும் தேசிய பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. தனக்கென ஒரு முத்திரையைப் பதித்து வருகின்றமை யாவரும் அறிந்ததே. வலய, மாவட்ட, மாகாண, தேசிய நிலைகளை தனதாக்கிக்கொள்ளும் அளவிற்கு அதி உன்னத வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வாற வெற்றி பெறுவதற்கு தூரநோக்குடனான செயற்பாடே காரணமாகும்.

### உதைபந்து (Soccer)

வடமாகாண உதைபந்தாட்ட வரலாற்றிலே எமது பாடசாலை ஓர் முன்னணிப் பாடசாலையாகத் திகழ்கின்றது. அந்த வகையில் 2011ம் ஆண்டில் 19 வயதுப் பிரிவினர் மாவட்டச் சம்பியனாகி தேசிய மட்டம் சென்றனர். 17 வயது அணியினர் வலிகாம வலயத்தில் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்க்கது. எமது உதைபந்தாட்ட அணிகள் கடந்த 5 ஆண்டுகளாக வடமாகாணத்தில் முன்னணி இடத்தைப் பெறுவது குறிப்பிடத்க்கது. தேசிய மட்ட சாதனைகளைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விளையாட்டுத்துறை முதல்வரும் பயிற்றுவிப்பாளருமான திரு.எஸ். உதயணன் அவர்களுக்கும் அணித் தலைவர்களுககும், அணியின் பொறுப்பாசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

### பூப்பந்து (Badminton)

எமது கல்லூரியின் பூப்பந்தாட்ட அணி தொடர்ந்து 3 வருடங்கள் மாவட்ட மட்டத்தில் சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது. இவ்வணி கடந்த 2 வருடங்களாக வடமாகாண சம்பியன்களாகி வடமாகாணத்தில் தனக்கென தனியிடத்தை வகிப்பது கல்லூரிக்குப் பெருமை அளிப்பதாகும். இவ்வணியின் பொறுப்பாசிரியர் திரு.தி.தில்லைச்செல்வன் அவர்களுக்கு எனது நன்றிகளும் பாராட்டுக்களும்.

### துடுப்பாட்டம் (Cricket)

எமது பாடசாலை துடுப்பாட்ட அணிகளான Under 13, Under 15, Under 17, Under 19 சிறந்த முறையில் பல போட்டிகளில் பங்குபற்றி சாதனைகளைப் படைத்து வருகின்றது. இனிவரும் காலங்களில் தேசியமட்டம் வரை செல்லும் தூரநோக்குடன் பயிற்சிகளைப்பெற்று வருகின்றது.

## ஹொக்கி (Hockey)

எமது கல்லூரியின்க் Hockey அணியானது சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற வலயமட்டப் போட்டியில் 17 வயதின்கீழ்ப் பிரிவு அணியினர் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த 3 ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட இவ் அணியினர் எதிர்காலத்தில் சிறந்த அணியினராக உருவாகி சாதனை படைப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு. இவ்வணியினரைப் பயிற்றுவித்த திரு.ரவிக்காந் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள்.

## மெய்வல்லுனர் போட்டிகள் (Athletic)

எமது கல்லூரி மெய்வல்லுநர் போட்டிகளில் வலய, மாவட்ட, மாகாண போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்து வருகின்றது. அந்த வகையில் 100 மீற்றர், 400 மீற்றர், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் மாவட்ட நிலைகளில் வெற்றிபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்றங்கள்

**இந்துமாமன்றம்**

தலைவர் - பொ. கோகுகலன்
செயலாளர் - சி. நந்திவர்மன்
பொறுப்பாசிரியர் - திருமதி.ஸ்ரீ.நிலாஜினி, திரு. மா.ஸ்ரீதரன்

**கிறிஸ்தவ மாணவ மன்றம்**

தலைவர் - V. விஜிந்
செயலாளர் - V. விஜயருபன்
பொறுப்பாசிரியர் - செல்வி. வி. அல்பேட்

**தமிழ் மன்றம்**

தலைவர் - ர. தினேஷ்
செயலாளர் - கு. பிரதீப்
பொறுப்பாசிரியர் - திருமதி.ச.சிவகுமார்

**ஆங்கில மன்றம்**

தலைவர் - ஜெ.தனுசியான்
செயலாளர் - எ. துவாரகன்
பொறுப்பாசிரியர் - திருமதி.R.S.மோகனதாஸ், திருமதி. சி. பிரதீபன்

**உயர்தர மன்றம்**

தலைவர் - இ. தர்சன்
செயலாளர் - வ. சசிராஜ்
பொறுப்பாசிரியர் - திரு.சு. சாந்தகுமார்

நுண்கலை மன்றம்

தலைவர் - பா. நிரோஜன்

செயலாளர் - சு. கயூரன்

பொறுப்பாசிரியர் - திருமதி.ஸ்ரீ.தெய்வேந்திரன், திரு.தி. தீபன்

**Interact Club**

தலைவர் - சு.கயூரன்

செயலாளர் - ஏ.சிவபாரத்

பொறுப்பாசிரியர் - திரு.சி.சிவகாந்தன், திரு.சா.கஜன்

சாரணர்

தலைவர் - ர. கேசவராஜா

செயலாளர் - சு. ஜோய் பிறேம்குமார்

பொறுப்பாசிரியர் - திரு.தி.தீபன், திரு.தி.கிருஷ்ணதாஸ், திரு. மா.நேரு

**கடேற் (மாணவர் படையணி)**

எமது பாடசாலையில் கடேற் (மாணவர் படையணி) உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வணியில் 30 மாணவர்கள் பயிற்சி பெறுவதுடன், தியத்தலாவையில் நடைபெற்ற பாசறையிலும் பங்குபற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவ்வணியினருக்குப் பொறுப்பாக எமது ஆசிரியர் திரு. நிக்கலஸ் பணியாற்றி வருகின்றார். அவருக்கு எமது நன்றிகள்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கமானது பாடசாலையின் அனைத்துச் செயற்பாடுகளிற்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து உதவுவதுடன் மாணவர்களின் உயர்விற்குப் பல்வேறு வழிகளில் உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பழைய மாணவர் சங்கங்கள்

எமது பழைய மாணவர் சங்கங்கள் பாடசாலையின் உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றனர். அந்த வகையில் கொழும்புக் கிளை, லண்டன் பழைய மாணவர் சங்கம், கனடா பழைய மாணவர் சங்கம், அவுஸ்ரேலிய கிளைகள் போன்ற சங்கங்கள் பாடசாலைக்கு பல கட்டடங்களை அமைத்துத் தந்து பௌதிகவள தேவையைப் பூர்த்தி செய்து மாணவர்களின் கற்றலுக்கு உதவி புரிந்துள்ளனர். அவர்களது இச்செயற்பாட்டிற்கு நன்றி கூறுகின்றேன்.

## இரவுப் பாடசாலை

மாணவர்களின் கல்வி உயர்ச்சிக்காக இரவுப் பாடசாலை இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களிற்கு மேலதிக வகுப்புக்கள் நடைபெறுகின்றன. க.பொ.த சாதாரணதர மாணவர்களுக்கும், உயர்தர மாணவர்களுக்கும் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் முகமாக இச் செயற்பாடு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விடுதி வசதி

எமது பாடசாலையில் ஆரம்பத்தில் இயங்கிவந்த விடுதி நாட்டின் சீரற்ற சூழ்நிலையால் இயங்காமல் பல காலம் மூடப்பட்டிருந்தது. பின்பு மீண்டும் பெற்றோர்களின் வேண்டுதலுக்கு இணங்க மீளவும் இயங்குகின்றது. இதன் காரணமாக தூர பிரதேசங்களிலிருந்து கற்கும் எமது மாணவர்கள் தங்கிக் கல்வி கற்கின்றனர். இது இவர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறந்த சுற்றுச்சூழல் பாடசாலை

எமது பாடசாலையின் சுற்றுச்சூழல் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை உகந்ததாக அமைந்துள்ளதுடன், மாணவர்களின் ஆரோக்கியத்திற்கும் உகந்ததாக அமைந்துள்ளது. இன்றைய உலகளாவிய வெப்பமாதலுக்கு தீர்வாக சுற்றுச் சூழலியலாளர்களாலும், கல்வியமைச்சாலும் முன்வைக்கப்படுகின்ற பிரச்சாரங்களுக்கு முன்னுதாரணமாக எமது பாடசாலையின் சூழல் அமைந்திருப்பது பலராலும் பாராட்டப்படுகின்றது. இவற்றைப் பராமரிக்கின்ற பணியில் ஆசிரியர்களும் மாணவர்களும் முன்னுதாரணமாகச் செயற்படுவது பாராட்டுக்குரியது. எனினும் இவற்றுக்கெல்லாம் நீருற்றி பராமரிக்கும் எமது பாடசாலையின் தொண்டர் ஊழியரான திரு. ஜோன் வைன் அவர்களின் அர்ப்பணிப்பான சேவை என்றென்றும் நன்றிக்குரியவை.

## தேசிய பாடசாலை

ஒரு நூற்றாண்டாக யாழ் மாவட்டத்தில் கல்விப் புலத்தில் தனக்கென ஒரு தனியிடத்தை வகித்த மானி இந்து அடுத்த நூற்றாண்டில் காலடி வைத்த காலத்தில் தேசிய பாடசாலை என்ற மகுடத்தைச் சூடிக்கொண்டமை எமக்கெல்லாம் பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. வலிகாம வலயத்தில் ஒரே தேசிய பாடசாலை என்ற தனித்துவத்தையும் நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு அப்பால் கிராமப் புறத்தில் ஒரு தேசிய பாடசாலை என்ற முதல் அந்தஸ்து எமது கல்லூரிக்குக் கிடைத்தமை எமது கல்லூரியின் கல்வி இணைபாடவிதானச் செயற்பாடுகளுக்குக் கிடைத்த அங்கீகாரமாகக் கருதி மகிழ்வடைகின்றோம்.

தேசிய பாடசாலை என்ற அங்கீகாரம் எமக்குப் பெருமளவு திறமையான ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ள உதவியதுடன் இன்று ஆசிரியர் பற்றாக்குறையில்லாத பாடசாலையாக அமைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது. அத்துடன் திறமையான மாணவர்களும் அனுமதிக்காகப் போட்டி போடுவதும் பாடசாலையின் உயர்வைச் சுட்டி நிற்கின்றது. இன்று க.பொ.த. சாதாரண பெறுபேற்றிலும், உதைபந்தும், பூப்பந்திலும் தேசிய நிலை தராதரங்களுக்கீடாக எமது பாடசாலை மிளிர்வதும் எதிர்காலத்தில் கிராமப்புற மாணவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்பதில் மட்டமற்ற மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வதீத வெற்றிகளுக்கு உழைத்த மானி இந்துக் கல்லூரிச் சமூகத்திற்கு எமது நன்றிகளும் பாராட்டுக்களும்.

## நன்றியுரை

எமது அழைப்பை ஏற்று பரிசு வழங்கல் நிகழ்விற்கு வருகை தந்து சிறப்பித்த பிரதம விருந்தினர் திரு.எஸ். முரளிதரன் அவர்கட்கும், சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த Dr.ஆ.இராமநாதன் அவர்கட்கும் கௌரவ விருந்தினராக வருகை தந்து சிறப்பித்த கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.S.சிவானந்தராஜா அவர்கட்கும் எமது மனமார்ந்த நன்றிகள். எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து சிறப்பித்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர், உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

எனது கடமைகளில் இணைந்து பங்கேற்றுப் பணியாற்றிவரும் பிரதி அதிபர் திரு.த.ரமேஸ் அவர்கட்கும், சோர்வில்லாமல் உழைத்துவரும் பகுதித் தலைவர்கள் திருமதி.ச.அமிர்தலிங்கம், திருமதி.இ.அருந்தவராஜா, திரு.டீ. கிருஷ்ணராஜா, திரு.பெ.வசந்தன், திரு.எஸ். பிரதீபன் ஆகியோருக்கும் விளையாட்டுத்துறை முதல்வர் திரு.க. உதயணன் அவர்கட்கும் ஏனைய ஆசிரியர்கள் கல்விசாரா உத்தியோகத்தர்களான திரு.காந்தன், திரு.பத்மநாதன், திரு.ஜோன் வைன் ஆகியோருக்கும் நன்றி கூறி மிக மகிழ்வுடன் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

**ச. சிவநேஸ்வரன்**
*அதிபர்*

# PRIZE LIST - 2011

**GRADE 6**

R. Diluxshan :- English, Maths, Hinduism, History,
M. Ananraj :- Science, Geography, Health Science, PTS, General Proficiency.
A. Enoke :- R.C, Art
S. Saranraj :- Dance
R. Logithan :- Civics
T. Thisnugan :- Drama
T. Abishek :- Music
K. Sahinthan :- Tamil, General proficiency
P. Jathushan :- General proficiency
S. Keerthikan :- General proficiency

**GRADE 7**

J. Swasthikan :- Tamil, English, Music, General proficiency
S. Olaikshan :- History, Geography, Health Science
S. Vinustan :- Hinduism, Art
D. Dimoldan :- Maths
B. Vithushan :- Science
S. Branavan :- Civics
P. Thanushan :- PTS
J. Gunaluxman :- Drama
S. George Praveen:- RC
S. Saranjan :- General Proficiency
S. Kumaran :- General Proficiency

**GRADE 8**

S. Tharsikan :- English, Maths, Hinduism, Drama, History, Health Science, Civics, General Proficiency
S. Thusyanthan :- Science , General Proficiency
R. Harisbabu :- PTS
L. Gowthaman :- Music
S. Sayaroosan :- Art, Tamil
P. Rohan :- General Proficiency

**GRADE 9**

R. Jasinthan :- English, Maths, Geography, Civics, History, PTS, General Proficiency
K. Narthanan :- Tamil, Music
K. Prathap :- Science, Hinduism
S. Kirisanth :- Health Science
S. Sobithan :- Drama & Theatre
T. Jesutharsan :- RC
Y. Prakalathan :- Art
J. Sajeesan :- General Proficiency
J. Kiritharan :- General Proficiency
S. Selvaprasanth :- General Proficiency

**Grade 10**

E.Thujeerakan :- English , Maths, ICT, General Proficiency
T. Sujinthan :- Tamil, Science, Hinduism, Civics, Tamil Lit., Agriculture
T.Sinthujan :- Health Science, Drama
S. George :- R.C
S. Mayooran :- History
S. Suvansan :- Geography
P. Lipinath :- Music
S. Rajeen :- Art
R. Renujan :- General Proficiency
S. Ahilan :- General proficiency

**G.C.E O/L - 2011**

E. Thuvarakan - (Religion , Tamil, English, Science , Mathematics, Business & accounting studies, Music)
T. Thuvarakan (Maths , Religion , Science, History, Business & Accounting, Drama, Health Science)
A. Nithursan (Religion , Tamil, Science, Maths, History, Business & Accounting, Music)
A. Nishanthan (Religion , Mathematics , Tamil, Science, History, Drama Health Science)
S. Thanusan (Religion ,Sciecne, Maths, Business & Accounting, Health Science)
R. Niruban (Religion , Maths , Tamil, Music, Health Science)
P. Banusan ( Tamil, Religion, Maths, Civics, Music)

**GRADE 12 ARTS**

T. Tharsikan :- Tamil, History
K. Lonsan :- Drama
J. Jeyansan :- Hindu Civilization
A. Nishankan :- Christianity, Geography
T. Ranjan :- Art
G.. Thayooran :- Music
J. Pratheepan :- Logic
J. Thuvarakan :- Political Science

**GRADE 12 COM**

S. Sribalarasath :- Economics , Business studies , Accounting , General proficiency
K. Ramesan :- Economics

**GRADE 12 BIO & MATHS**

A. Sothyras :- Phycis
N. Denis :- Biology, Chemistry
K. Tharsan :- Com. Maths

**GRADE 13 ARTS**

P. Aynkaran :- Drama & Theatre
P. Kokilan :- Geography, Tamil, Hindu Civilization
V. Sasiraj :- Logic
B. Nirojan :- Art
R. Thinesh :- Political Science
P. Denath :- Christianity

**GRADE 13 COM**

R. Arojan :- Business Studies, Accounting, Economis, General proficiency

**GRADE 13 BIO & MATHS**

S. Kavipriyan :- Chemistry , Physics , Com. maths , General proficiency
T. Kanisanth :- Biology

**Obtaining A's in G.C.E (A/L) 2011**

| | | |
|---|---|---|
| 1. | M. Amilan | Economics |
| 2. | R. Anncilеy | Economics |
| 3. | T. Aitheepan | Political Science |
| 4. | K. Vaseekaran | History, Drama |
| 5. | B. Mohanraj | Geography, History, Tamil |
| 6. | A. Nirojan | History |
| 7. | P. Keerthanan | Physics, Com. Maths |
| 8. | M. Anesteen | Christianity |
| 9. | S. Jathavan | Drama |
| 10. | E. Thanesh | Economics |

## Prize winners in Competitions

- **Art competitions** : "Peace through multi culture"
  D. Dimoldan - 1st place in Zonal and provincial level
  "Dengue eradication Poster"
  T. Aheeeban - 3rd place in Provincial level
  - World wetland day
  V.S. Vimal - 1st place in District level

- **Social science competition**
  B. Mohanraj - 1st place in Zonal level

- **English Day competition** – Creative writing
  E. Thuwarakan - 3rd place in Zonal level

# The Winners of Games - 2011

## Cricket

| | |
|---|---|
| Best Batsman | R. Dilshan |
| Best Bowler | W. Sabesan |
| Best Fielder | P. Nixan |
| All rounder | S. Nirosan |

## Under – 19 Badminton Team

| | |
|---|---|
| Zonal Level | 1st place |
| District Level | 1st place |
| Provincial Level | 1st place |

Best Badminton player - S. Shanjeevan

Team Player

1. S. Shanjeevan
2. P. Shakthibagan
3. R. Nishanthan
4. G. Sivanesan
5. R.Niruban
6. M. Anuraj

## Foot ball

Under 17- Zonal Champions
Provincial 3rd Place

Under 19- Northern Province - 3rd Place

Foot ball colours - T. Janavinthan

**Team players**

| | |
|---|---|
| T. Janavinthan | P. Nixan |
| S. Yaliniyan | V. Jeevaraj |
| N. Rishitharan | W. Sabesan |
| S. Vinoraj | S. Chenthan |
| K. Thanusan | S. Vakeesan |
| R. Vivek | S. Suthumilsan |
| K. Kajulthas | |

## Hockey

Zonal Level 3rd Place

Best Hockey player - K. Kuttaleesan

Best Athletics : K. Nishanthan

## MOMORIAL PRIZES - 2011

1. Prize donated by Mr.R. Jayamuruganamthan in memory of his father Mr.Rajadurai, **R. Romert Annciley, M. R. Amilan** 5000/= 5000/2
2. Swamy Vipulanantha (Emiratus Principal of M.H.C E..glish Day Prize donated by Mr.N.Vivekanandarajah President OBA M.H.C for the best performance in English G.C.E (O/L) - **E. Thuvarakan** 400/2
3. Thurairatnam Mathematics prize Donated by Mrs.Srikaran for best student in Mathematics G.C.E. O/L - **S. Thanusan** 400/2
4. Dr.N.Patkunarajah memorial prize for chemistry donated by Miss.N.Nagalingam – **O. Karthikeyan** 400/2
5. Prize donated by Late Miss.P.Kandasamy (Emiratus Principal Pandateruppu Girls' College) for best student in Grade 7 – **I. Swasthikan** 1000/=
6. Prize donated by Miss.Jeyanthy in Memory of her mother Mrs.Ponmalar Thavappiragasam for best perfomance in Christianity A/L 2011 – **M. Anasteen** 1000/2

7. The most cultured Student's shield donated by Mr.C.Kesawarajah (Emiratus Principal of M.H.C ) in memory of his Mother Mrs.Sironmani Cheladurai – **B. Mohanraj** Chambion

8. Prize donated by late Mrs.R.Sothilingam (Emiratus Principal of Moolai Saiva Piragasa Vidyalam) in memory of Mrs.Sothilingam for best performance in G.C.E.A/L – **B. Mohanraj** 1000/2

9. Prize donated by Mr. S. Sivaneswaran, principal of M.H.C in memory of his mother Saraswathy Sampanthasaranalayam for best all round performance **R. Romert Annciley** 1000/2

10. Prize awarded for best performance in Carnatic Music donated by Miss.R.suppaiyapillai in memory of Suppaiahpillai Rajaparamasivam **A. Nithursan, K. Kokulan**
1000/2 1000/2

11. Prize donated by Eyakumar Mamani Mr.A.Natkunasekaran in memory of his grand son Hary for Natkunasekaran Schlorship (2010 Drama)

Best Actor : J. Judesakan 1000/2

Best Actress : S. Nishankan 1000/2

12. Sureskuma memorial prize Donated by his sister for scholarship **A.Sothyraa**

13. V. Veerasingam (Emiratus Principal MHC) prize for leadership qualities exhibited by a student donated by Vyramuthu Sundaralingam - **W. Sulaxsan** 3000/2

14. Suthumalai Annamalai pariyariyar prize for best Bio Science student Donated by Vyramuthu Sundaralingam **K. Sivatheepan** 3000/2

15. H.S. Narayanasarma (Former Teacher MHC) memorial for the best student in Maths in G.C.E (A/L) Donated by Vyramuthu Sundaralingam **R.Umashankar** 3000/2

16. Best English student in G.C.E (O/L) Donated by Mr. & Mrs. Vanniyasingam **R.Kajan** English Dic

performance in Religion 6 -11

Grade 6 - R. Diluxan Religion Book

Grade 7 - S. Vinustan "

8 - S. Tharsikan

9 - K. Prathap

10 - T. Sujinthan

11 - E. Thuvarakan

## Special Awards - 2011

1. Muthuvetpillai Memorial Scholorship For best performance in G.C.E (O/L) – 1) 2011 - **E. Thuvarakan** 2) 2010 - **N. Denis** 7000/2
2. Chari Memorial Scholorship
   (1) **P. Sakthibagan**
   (2) **Manipay Hindu college - Principal - Sports**
3. Perayiravar Memorial Scholorship for all-rounder 2011
   Grade 6 - **M. Ananraj** 2500/2
   Grade 7 - **J. Swasthikan**
   Grade 8 - **S. Tharsikan**
   Grade 9 - **R. Jasinthan**
   Grade 10 - **E. Thujeerahan**
4. R.V. Arumugam Memorial Scholorship donated by Dr.A. Ramanathan memory of his father Late R.V. Arumugam for best performance in Geography **B. Mohanraj** 3500/2
5. Dr.N. Rajanathan Memorial Scholorship donated by his sister Miss Nagalingam for best performance in Biology 1250/2
   **K. Sivatheeban**
6. W.G. Annappah Memorial Scholorship donated by Mr. A. Jeyarajah for best Scout
   **T. Dinojan**
7. Sivarajendra Memorial Scholorship sponsored by Mr. R. Vasanthasenan (Judge Distict Court Jaffna) and Mr. R. Vasanthakumar (Principal- Navaly M.V) for the best performance in English
   Grade 6 - **R. Dilaxshan** 450/2

Grade. 7 - **J. Swasthikan** 450/2

Grade 8 – **S.Tharsikan** 450/2

8. Prize Donated by Lion S. Thangarajah in the name of Mr Thevarajah for the best performance in English G.C.E (O/L) – 2011
**R. Newtonraj** 1250/2

9. Vanniyasingam Scholorship Donated by his sons Venketesh Luckshman, Senior Lecturer, Department of Zoology, University of Jaffna, Baskaran (Accountant) for best performance in Tamil G.C.E. (A/L) – 2011. **B. Mohanraj** 1250/-

10. Prize donated by Lion S.Sivarajeeswaran in memory of his parents Late Mr. & Mrs Seevaratnam for the best performance in Drama&Theatre G.C.E. (A/L) – 2011 **K. Vaseekaran** 1250/2

11. C. Kesavarajan (Emiratus Principal, MHC) scholarship for the best performance in English
Grade 9 - **R. Jasinthan** 450/2
Grade 10 - **E. Thujeerakan** 450/2

# Manipay Hindu College - Staff

| No | Name | Qualification | Grade |
|---|---|---|---|
| 01 . | Mr.S.Sivaneswaran | B.Com(Hons), Dip in Edu, M.ED | SLPS 1 |
| 02 . | Mr.T.Ramesh | B.Sc, Dip. in Edu., M.Sc | SLTS 2 - II |
| 03 . | Mr.V.Kirshnaraja | Sp. Trd, (Com.) | SLTS 2 - II |
| 04 . | Mrs.C.Amirthalingam | B.A, Dip.in Edu, MED | SLTS 1 |
| 05 . | Mrs.I.Arunthavaraja | B.Sc, Dip. in Edu. | SLTS 2-II |
| 06 . | Mr.P.Vasanthan | B.A, Dip. in Edu, BED (Maths) | SLTS 2 - II |
| 07 . | Mrs.S.R.Theivendran | Diploma in Carnatic Mu. | SLTS 1 |
| 08 . | Mrs.S.Sivakumar | B.A, Dip. in Edu. | SLTS 1 |
| 09 . | Mr.K.Sivapatham | Sp. Trd. (Maths) | SLTS 1 |
| 10 . | Mr.S.Yogeswaralingam | Sp. Trd. (Agriculture) | SLTS 2 - II |
| 11 . | Mr.S.Uthayanan | B.A, Dip. in Edu | SLTS 2 - II |
| 12 . | Mrs.R.S.Mohanadas | B.A, Dip. in Edu, MED. | SLTS 2 - II |
| 13 . | Mr.S.Shanthakumar | Sp. Trd, (Com.) | SLTS 2 - II |
| 14 . | Mrs.J.Mahendran | B.A(Hons), Dip. in Edu. | SLTS 2 - II |
| 15 . | Mrs.N.Sriskantharajah | B.A(Hons), Dip. in Edu. | SLTS 2 - II |
| 16 . | Mr.S.Lingeswaran | B.A, Dip. in Edu. | SLTS 2 - II |
| 17 . | Mr.T.Theepan | B.A(Hons), Dip. in Edu., MED | SLTS 2 - II |
| 18 . | Mr.T.Krishnathas | B.A, Dip. in Edu. , N.D.T (Sci.) | SLTS 2 - II |
| 19 . | Mr.N.Nithiyakaran | B.A, Dip. in Edu. | SLTS 2 - II |
| 20 . | Mr.S.Gajan | B.Sc.(Computer Science) | SLTS 3 - I |
| 21 . | Mrs.S.Pratheepan | B.A | SLTS 3 - I |
| 22 . | Mr.S.Sivakanthan | B.Sc(with Education), MED | SLTS 3 - I |
| 23 . | Miss.V.Albert | B.A, M.A(Tamil) | SLTS 3 – I |
| 24 . | Mr.T.Thillichelvan | B.Sc | SLTS 2 - II |
| 25 . | Miss.S.Sivapathasundaram | Nat. Dip. in Teach (Eng.) | SLTS 3 - I |
| 26 . | Mrs.M.Almines Suren | G.C.E A/L | Nil |
| 27 . | Mrs.B.Niranjan | B.A | SLTS 2 - II |
| 28 . | Mrs.N.Thiyagarajah | B.A, Dip. in Edu. | SLTS 2 - I |
| 29 . | Mrs.K.Vaseekaran | B.A, Sp. Trd (Maths) | SLTS 2 - II |
| 30 . | Mr.M.Sritharan | B.A Nat. Dip. in Teach (Hinduism) | SLTS 2 - II |
| 31 . | Mrs.K.Katpahajothy | B.A, Nat. Dip. in Teach (Eng.) | SLTS 2 - II |
| 32 . | Mr.R.Rakulan | Nat. Dip. in Teach (Maths.) | SLTS 2 - II |
| 33 . | Mrs.K.Thavarajah | B.Sc, Dip. in Edu., MED | SLTS 1 |
| 34 . | Mr.P.Nakkeeran | Nat. Dip. in Teach (Sci.) | SLTS 2 - II |
| 35 . | Mr.K.Vijayabala | B.F.A | SLTS 3 - I |

| | | | |
|---|---|---|---|
| 36 . | Mrs.S.Prapakarn | Nat. Dip. in Teach | SLTS 3 - I |
| 37 . | Mrs.S.Sobanraj | B.A | SLTS 3 - I |
| 38 . | Miss.N.Komathy | B.A, Dip. in Edu. | SLTS 2 - II |
| 39 . | Mr.T.Pratheepan | B.Sc(Hons), Dip. in Edu. | SLTS 2 - II |
| 40 . | Mrs.S.Vasanthakumar | B.A(Hons) Psy., Dip. in Edu. | SLTS 2 – II |
| 41 . | Mrs.A.Hariharan | Nat. Dip in Teach (English) | SLTS 3 - I |
| 42 . | Mr.S.Indrakumar | B.A | SLTS 2 - II |
| 43 . | Mr.S.Sarathchandran | B.Sc(Hons), M.Sc | SLTS 2 - II |
| 44 . | Miss.K.Elilarashi | Nat. Dip. in Teach (Phy. Edu) | SLTS 3 - I |
| 45 . | Miss.R.Ranjitha | Nat. Dip. in Teach (Hinduism) | SLTS 3 - I |
| 46 . | Miss.S.Nishanthini | Nat. Dip. in Teach (Hinduism) | SLTS 3 - I |
| 47 . | Miss.Y.Tharshiga | Nat. Dip. in Teach (Drama) | SLTS 3 - I |
| 48 . | Miss.T.Satha | Nat. Dip. in Teach (Dance) | SLTS 3 - I |
| 49 . | Mr.A..Nicholas | Nat. Dip. in Teach (Design & Tech) | SLTS 3 - I |
| 50 . | Mr.K.Regikesan | Nat. Dip. in Teach (Maths) | SLTS 3 - I |
| 51 . | Miss.R.Tharmini | Nat. Dip. in Teach (Music) | SLTS 3 - I |
| 52 . | Mr.P.Senthilkumaran | Nat. Dip. in Teach (Sci) | SLTS 3 - I |
| 53 . | Miss.T.Hopika | Nat. Dip. in Teach (Eng.) | SLTS 3 - I |
| 54 . | Mr.K.Panchalingam | B.Sc, Dip. in Edu. | SLTS I |
| 55 . | Mr.R.Rajeswaran | B.Com, Dip. in Edu., MED | SLTS 2 – II |
| 56 . | Mrs.A.Asupathyraj | Nat. Dip. in Teach (Maths) | SLTS 2 - II |
| 57 . | Mr.M.Asupathyraj | Nat. Dip. in Teach (Maths) | SLTS 2 - II |
| 58 . | Mr.M.Nehru | B.A | SLTS 2 – II |
| 59 . | Mrs.S.Soundrarajah | B.Com, | SLTS 2 - I |
| 60 . | Mrs.T.Rajaratnam | Nat. Dip. in Teach (Dance) | SLTS 3 - I |
| 61 . | Miss.C.Mary Pamila | Nat. Dip. in Teach (Christ) | SLTS 3 - I |
| 62 . | Mr.T. Arulkumaran | BA, M.A | SLTS 3 - I |
| 63 . | Mrs.S.Rishikesan | BFA | SLTS 3 - I |
| 64 . | Mrs.T.Vicnaruban | Nat. Dip. in Teach (Science) | SLTS 3 - I |
| 65 . | Miss.K.Subathini | Nat. Dip. in Teach (Science) | SLTS 3 - I |
| 66 . | Miss.R.Sivapriya | B.F.A | SLTS 3 - I |
| 67 . | Mr.S.Krishnakumar | B.B.A | SLTS 3 - I |
| 68 . | Mr.T.Thushanth | BSc | SLTS 3 - I |
| 69 . | Mrs.M.Matheepan | Nat. Dip. in Teach (Primary) | SLTS 3 - I |
| 70 . | Mr.K.Manivannan | B.A | SLTS 3 - I |
| 71 . | Miss.A.Niroshini | Nat. Dip. in Teach | SLTS 3 - I |
| 72 . | Mr.S.Pragash | Nat. Dip. in Teach (Maths) | SLTS 3 - I |
| 73. | Mr. K. Sayanthan | B.A | SLTS 3 - I |
| 74. | Miss P. Ushanthini | B.A | SLTS 3 - I |

Vasan.

73
63
72
208

70
62
72
204

79
71
70
220

Natkunasekaram
001416 282385

# கல்லூரிக் கீதம்

வாழ்க நம் நாடு வாழ்க நம் பள்ளி வாழிய வாழியவே

அருந்தமிழ் மொழியும் ஆங்கிலக்கலையும்
ஆரியமொழியுடன் வளரும்
விருந்தெனப்போற்றும் விஞ்ஞானமும் இங்கே
வியனுற வளர்ந்தினி தோங்கும்

மானிப்பாய் இந்துக் கல்லூரி வாழ மாணவர் ஆவன செய்வோம்
கனவிலும் மறந்திடக் கருதோம்
வானமளந்த தமிழ்மொழி போல வாழிய வளமுடனென்றும்
கலையே பெறவே உழைப்போம் நிலையிது பெற உழைப்போம்

8341

ANDRA DIGITAL PRINTERS T.P : 021 222 8929